இதழ்-88

01.10.2025

# தூமி

பல்சுவை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....


03 தாய்மொழி காக்கப்படாவிட்டால் தலைமுறைகள் நம் வேரை மறந்து விடும்
06 வாழ்க்கை என்னும் ஓடம்
10 அமைதி பேசும் உலகம்
11 ChatGPT பல்கலைக்கழக மாணவர்களுக்கு புத்திசாலி நண்பனா?அல்லது கல்வி குறுக்கு வழியா?
17 யுத்தங்களால் கிடைத்தது என்ன?
22 43 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெறும் IESL இன் புத்தாக்க போட்டிகள்
24 மலையக பெண்களின் சமூக இடைவெளியிருந்து முன்னோக்கிய பாதை ஓர் விமர்சன கண்ணோட்டம்
31 கிழக்குலகின் அதிகார உதயம்
34 பேராசிரியராகியதோடு சாகித்திய விருதையும் பெற்றுக் கொண்டார் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா
35 பள்ளி வயதில் வேலையா?
38 துணிந்து நின்ற துனித் வெல்லாளகே




# தாய்மொழி காக்கப்படாவிட்டால் தலைமுறைகள் நம் வேரை மறந்து விடும்

தமிழ் உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாக இருந்து, நம் பாரம்பரியம், பண்பாடு, அடையாளம், உயிர்மூச்சு என அனைத்தையும் தாங்கி நிற்கிறது. நம் மண்ணில் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில்கூட இன்று தமிழின் புழக்கம் குறைந்து வருகிறது. அன்றாட வாழ்வில் வீட்டில் பேசப்படும் மொழி தமிழாக இருந்தாலும் கல்வி, வேலை, வணிகம், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஆங்கிலம் மற்றும் பிறமொழிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன.

குறிப்பாக வணிக நிறுவனங்களில் தமிழ் மொழிப் பெயர்ப் பலகைகள் குறைந்து, ஆங்கிலப் பலகைகள் பெருகி நிற்பது வருத்தத்திற்குரியது. நம் மண்ணில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில்கூட வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளில் தமிழ் காணாமல் போகும் நிலை உள்ளது.



‘ஆங்கிலப் பலகை இருந்தால் தான் வியாபாரம் உயரும்’ என்ற எண்ணம் வேரூன்றி விட்டதால் தாய்மொழிக்கு உரிய மரியாதை புறக்கணிக்கப்படுகிறது.

இந்த நிலைமை பல பாதகங்களை உருவாக்குகிறது. தாய்மொழியை புறக்கணிப்பதால் இளம் தலைமுறையில் தமிழின் மீது உள்ள பெருமை குறைகிறது. வணிகம் தமிழருக்கானதாக இருந்தாலும் அதன் முகப்பே வேறு மொழியில் இருப்பது நம் பண்பாட்டு அடையாளத்தை மறைக்கிறது. தமிழை மட்டுமே அறிவோர் வணிகத்தின் பெயர் அல்லது சேவையை புரிந்து கொள்ள முடியாமல் சிரமப்படுகின்றனர். நாளடைவில் தாய்மொழியைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களும் பிறமொழிகளுக்கு மாறி விடுகின்றனர்.

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கான கடைகளில் தமிழ் பெயர்ப் பலகைகள், அறிவிப்புகள், ரசீதுகள் போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இது வாடிக்கையாளர்களுக்கு எளிதான புரிதலை அளிப்பதோடு மட்டுமல்லாமல் வணிகத்தின் நம்பகத்தன்மையையும் உயர்த்துகிறது. வணிகம் செய்யும் இடம் தமிழர்களுக்கானதெனில் அதில் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும். மொழியற்ற வளர்ச்சி நிலையானதல்ல. ஆகவே வணிக நிறுவனங்கள் தங்களது பலகைகள், அறிவிப்புகள் அனைத்திலும் தமிழுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் மக்கள் அதனை வலியுறுத்தி தமிழை புறக்கணிக்கும் கடைகளை புறக்கணிக்கத் தொடங்க வேண்டும். தமிழ் பலகைகள் கொண்ட கடைகளுக்கு ஆதரவு அளிப்பது பிற கடைகளுக்கும் தமிழை பயன்படுத்தும் மனநிலையை உருவாக்கும். இது சட்டம் இயற்றுவதற்கும் மேலான ஒரு சமூகப் பொறுப்பு.

மொழிப் பெருமை குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது. குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர் வைப்பது ஒரு பாரம்பரிய மரபாக இருந்தாலும் இன்று அது குறைந்து வருகிறது. வெளிநாட்டு ஒலிப்பாடுகளுக்கேற்ப ஆங்கிலம் கலந்த பெயர்களை பலர் விரும்புவதால் தமிழின் இனிமை மறைந்து விடுகிறது. அழகான தமிழ்ப் பெயர்கள் வைப்பது மொழியின் பெருமையைச் சுமக்கும் ஒரு சிறிய முயற்சி மட்டுமல்ல, அது தலைமுறைகளுக்கான ஒரு கலாச்சாரப் பரிசாகும். அதேபோல் அன்றாட உரையாடல்களில் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கமும் குறைந்து வருகிறது. சமூக ஊடகம், தொலைபேசி உரையாடல்கள், நண்பர்கள் வட்டாரங்களில் ஆங்கிலம் கலந்த தமிழ் அதிகரித்து



வருவதால் தமிழ்ச் சொற்களின் செல்வாக்கு குறைகிறது. தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கம் மீண்டும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதற்குப் பள்ளி மட்டத்திலிருந்தே ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும்.

மேலும் கையெழுத்து வைப்பது கூட இன்று பெரும்பாலும் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெறுகிறது. தமிழில் கையெழுத்து வைப்பது சட்டரீதியாகவும் செல்லுபடியாகும் என்ற விழிப்புணர்வு பலருக்கு இல்லை. இதற்கு பள்ளி மட்டத்திலிருந்தே விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். கையெழுத்து முதல் வணிகப் பலகைகள் வரை அனைத்திலும் தமிழுக்கு முன்னுரிமை வழங்கும் மனநிலையை உருவாக்கினால்தான் மொழி காப்பாற்றப்படும்.

தாய்மொழி காக்கப்படாவிட்டால் தலைமுறைகள் நம் வேரை மறந்து விடும். எனவே இன்று முதலே குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர் வைப்பது, அழகான தமிழ்ச் சொற்களைப் பேசுவது, தமிழில் கையெழுத்து வைப்பது, வணிகங்களில் தமிழுக்கு முன்னுரிமை வழங்குவதை வலியுறுத்துவது ஆகியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவே தமிழின் பெருமையை உயர்த்தும் உறுதியான பாதையாகும்.








வாழ்க்கை என்பது ஓடம்,,, அது வழங்குகின்ற பாடங்கள் எல்லாம் மறக்க இயலாத வேதம்.. இது எல்லோரும் கேட்ட பாடல்..

எல்லோருமே இந்த ஓடத்தில் தான் பயணிக்கிறோம். இந்த ஓடப்பயண அனுபவங்கள் பற்றி கொஞ்சம் கதைக்க நினைக்கிறேன்....

இந்த பெருங்கடலில் ஓர் ஓடத்தில் தன்னந்தனியான பயணம் தனியாக என்று சொல்வது மனிதர்கள் வேறு யாரும் இல்லை. மற்றைய படி, வாரித்தழுவும் தென்றல்.. இரைச்சல் போடும் அலைகள் .. அலைகளின் கீழுள்ள ஆழ்கடலின் அமைதி... அதற்குள் ஒளிந்துள்ள பலகோடி மர்மங்கள்.... எல்லாம் சூழ்ந்திருக்கையில் இதை தனிமை என்று எப்படி சொல்வது?

எத்தனையோ அலைகளை இந்த ஓடம் கண்டுவிட்டது. முதன்முதலில் பேரலை கண்டபோது நெஞ்சு முழுதும் அச்சத்தால் நிரம்பியது சத்தியம்தான்.. அடுத்த பேரலையில் அச்சம் முன்னதைப்போலல்ல. எங்கிருந்தோ சில கைகள் முதுகில் தட்டி சொன்னன 'எல்லாம் சரியாகிவிடும்..' அந்த கைகளுக்கு நன்றி..

இப்போது எத்தனையோ பேரலைகள் வருகின்றன. போகின்றன.. ஆனால் ஓடம் தடுமாறுவதில்லை..

‘எல்லாம் சரியாகிவிடும் என்பது பொய்.. பழகிவிடும் என்பதே மெய்.. ஒருமுறை இந்த ஓடத்தில் தட்டுத்தடுமாறி செல்லும் போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது.. அது சம்பவம் இல்லை… சரித்திரம். விசயம் இல்லை.. விசித்திரம்… சரி… சரி… அதை இனி விபரித்து என்ன பயன்.. இருந்தாலும் இறைவனிடம் இன்னமும் கேட்க நினைக்கின்ற ஒரு கேள்வி உண்டு..

‘அவளை எனக்கென்று தான் எழுதவில்லையே பின்பு ஏன் எங்களுக்குள் அந்த சந்திப்பை ஏற்படுத்தினாய்..’

ஒரு பறவை போல் எங்கிருந்தோ ஒரு நாள் இந்த ஓடத்திற்குள் என் தனிமைக்கு துணையாக வந்தாள்... இன்னொரு நாள் விட்டுப் பறந்து சென்றாள்.. அவ்வளவுதான்.. அற்ற குளத்தின் அறுநீர்ப்பறவை அவள் அல்ல. பெற்ற குலத்தின் பெருமை பேண புறப்பட்டாளாம்..

ஒரு பறவை வந்தமரும் போது அன்பில் வாரி அணைத்துக் கொள்வதைப்போல்.. அதே பறவை விலகிச் செல்ல முற்படும் போது கைகளை அகல விரித்து வழிவிடும் துணிச்சல் இருந்துவிட்டால் போதும் வாழ்வில்.....

ஓர் ஆழமான உண்மை சொல்லவா?
பறவை பறந்தபின்தான் கூண்டுக்கும் விடுதலை…

எதையாவது பற்றுதல் என்பது தேவைதான். போகட்டும்.. என் துடுப்பை பற்றிக் கொள்கிறேன். பற்றுதலில்லா பக்குவம் என்பது வரும் வரை - இழப்பதில் இன்பத்தை உணரும் வரை இந்த துடுப்பை மட்டுமே பற்றுவதாய் ஒரு முடிவு.



எங்கு செல்ல வேண்டுமோ அங்கு என்னை அழைத்துச் செல்ல துடுப்புகள் ஆயத்தமாக தான் இருக்கின்றன. எங்கு போக வேண்டும் என எனக்குத்தான் சொல்லத்தெரியவில்லை துடுப்புகளிடம்…
கைகளில் ஒரு புத்தகத்தோடு அமர்ந்திருந்தேன் ஒரு நாள்..

நான் சொல்ல நினைத்த இடத்தை அந்த புத்தகக் கவிதை சொன்னது..

“யாரும் இல்லாத இடத்திற்கு போக வேண்டும்.. அங்கே நான் கூட இருக்கக்கூடாது” ஆகா.. கவிக்கோவின் வரிகள் சொன்ன அந்த இடத்தை எப்படி நான் என் துடுப்புகளிடம் சொல்வேன்..

இந்த ஓடத்தில் இன்னும் பல இரவுகள் எனக்குள் விடியாமல் இருக்கின்றன. எந்த சூரியனாலும் அந்த இரவுகளை துடைக்க முடியவில்லை.. புயலான சில இரவுகள்…

பெருங்கடல்… பெருமழை.. பேரிடி.. என உலகில் பெருந்துணை என நினைத்த கடலும் வானும் சேர்ந்து நின்று எனை வதைத்த நாட்கள்.. எங்கோ இருப்பதாய் நினைத்த வல்ல இறைவனிடம் மன்றாடுவதை தவிர வேறு மார்க்கமில்லை என்னிடம்.. ஆனால் எல்லா முறையும் ஏமாற்றம் என்ற வரம் தான் பதில்.. ஆனால் இப்போதெல்லாம் எனக்கு ஏமாற்றம் என்பதில்லை.. ஏன்? எதிர்பார்ப்பு எனும் சொல் என் அகராதியை விட்டு அகன்று போனது அதனால்…

அதற்காக ஏமாற்றங்கள் மட்டுமே என் பயணமென்றல்ல.. சில நல்ல கற்றல்களும் உண்டுதான்.. ஒரு நாள் ஒரு தூண்டில் போட்டு மீனை பிடிக்க முயற்சித்தேன் .. மீனும் சிக்கியது.... சிக்கிய மீனின் கண்களையே பார்த்தேன்.. மறுபடியும் கடலிலேயே விட்டு விடலாமா என்று தோன்றியது.

எல்லோரும் சொல்வது போல் அந்த மீனின் கண்களில் தெரிந்தது மரணபயம் அல்ல.. சிறு புழுவிற்காக வந்து ஏமாந்து விட்டோம் என்ற அவமானம்... ஏமாற்றமும் அவமானமும் நிறைந்த என் கண்களால் காணமுடிந்தது அதைத்தான்.

இப்படியே போனால் உணவிற்கு என்ன செய்வது? கொன்றால் பாவம் தின்றால் போச்சு இது உண்கிற மாமிசத்திற்கான உபதேசம் மட்டுமல்ல. சக மனிதர்களிடத்திலும் இதுவே விதி என்பது உலகம் எழுதிவைக்காத உண்மை. எவனையும் அழிக்கலாம்..... எவன் குடியையும் சிதைக்கலாம்.. சுகபோகம் நாம் அனுபவித்தால் சரி என்று சொல்வது எவ்வளவு பெரிய அபத்தம் இத்தகைய உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்னால் சாத்தியமாகவில்லை. பல கற்றும் அறிவிலி ஆனேன்.

தடுமாறுகிற ஓடத்தில் தத்தளித்து நின்றேன். “ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும்” பழமொழி பொய்யாகவல்லை.. எல்லாம் மாறியது

உழைக்காமல் வாழ்ந்தது ஒரு காலம்
வாழாமல் உழைத்தது இன்னொரு காலம்

ஆம்.. இப்போது வாழ்வதற்கு காலம் இல்லை. வாழ்வதற்கென்று ஒரு காலம் தேவையுமில்லை. வாழ்க்கை என்பது ஓடம்தான். அது ஓடும் நீரின் போக்கில் எம்மை செலுத்துகிறது. திசை வேண்டாம். ஓடும் நீரோடு பயணப்படுவோம். முடிந்தால் பறக்கவும் செய்வோம்.. எல்லா மனிதர்களுக்கும் இறக்கைகள் இருக்கின்றன.

பிற மனிதர்கள் கொடுத்த சுமையின் காரணமாகவே நாம் பறக்காமல் இருக்கிறோம்... நாம் பறக்கமுடியாத அளவிற்கு ஒரு போதும் நம் சிறகுகள் நனையாது..

சற்று உதறிக் கொள்வோம்.. காத்திருப்போம்...மழை வந்தது போல் வெயிலும் வரும்... மகிழ்ச்சி - எங்கிருந்தோ
வானத்தில் பெய் எனப்
பெய்யும் மழை அல்ல.
அது இயல்பின் இரசனை

ஆரவாரமில்லாத
சாதாரணங்களை
இரசிக்கத்
தொடங்கும்போதுதான்
அது ஊற்றுக்கண்ணாய்
உள்ளிருந்து ஊற
ஆரம்பிக்கும்.

உங்களை மகிழ்விக்க
நீங்கள்
ஒருவரே போதும்..






# அமைதி பேசும் உலகம்


விடியலின் மௌனம் போல் அமைதி விரியும்,
புரிதலின் புன்னகை, மனிதம் பிறக்கும்.
அவிழாத முடிச்சாய் இருக்கிறது வன்முறை,
அதை அவிழ்க்கும் கயிறு – பொறுமை, பாசத்தின் உறை.

ஒரு துளி சினம் – ஒரு தீயெனப் பரவும்,
ஒரு சொல் அன்பு – ஒரு சமாதானம் தரும்.
கண்களில் சினம் இருந்தால் உலகம் சுடும்,
இதயத்தில் அமைதி இருந்தால் வாழ்க்கை சிரிக்கும்.

படைகள் அல்ல பாதுகாப்பு,
புரிதல் தான் நம் காப்பு.
நீ நான் என்று பிரிந்து சண்டை செய்யாதே,
நாம் என்றெண்ணி மனிதநேயத்தைச் செய்!

பாசமும், பரிவும் பேசும் இடத்தில்
போருக்கு வாயில்லை, பிணைக்கு இடமில்லை.
நாம் அமைதி தேடி நடந்தால் –
புதிய பூமி உருவாகும் நாள் இன்றுதான்

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்




# ChatGPT பல்கலைக்கழக மாணவர்களுக்கு புத்திசாலி நண்பனா?அல்லது கல்வி குறுக்கு வழியா?

முரளிதரன் ஷாம்பவி
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உளவியல் துறை
2ம் வருடம்.

ஒரு பல்கலைக்கழக மாணவரின் கண்மூடித்தனத்திற்கும் கல்வி மாற்றத்திற்கும் இடையேயான ஒரு சிந்தனையின் பயணம்.

தொழில்நுட்பம்,விஞ்ஞானம் ஆகிய இரண்டும் தற்கால உலகின் இரு கண்கள். இந்நாளில் தொழில்நுட்பம் இன்றி எதுவும் சாத்தியம் இல்லை. காரணம் தொழில்நுட்ப வளர்ச்சியின் அபரிவிதமான வளர்ச்சி. இவற்றுள் தற்கால முக்கிய சக்தியாக வலம் வருவது செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence ). இவ் செயற்கை நுண்ணறிவானது முக்கியமான புரட்சியை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தி உள்ளது. AI தொழில்நுட்பமானது மருத்துவம் கல்வி, வணிகம், சுகாதாரம், அரசியல் உட்பட பல துறைகளில் அதிரடியாக முன்னேறி வருகின்றது. அந்த வகையில் 21 ஆம் நூற்றாண்டின் கல்விச் சூழல் தொழில்நுட்ப வளர்ச்சியால் முழுமையாக மாறி வருகின்றது என்றால் மிகை ஆகாது. இதில் Open AI நிறுவனத்தின் ChatGPT போன்ற பெரிய மொழி மாதிரிகள் (Large language models ). கல்வியில் புதிய

முன்னேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றன. இன்று பல்கலைக்கழக மாணவர்களின் கதாநாயகனாக ChatGPT மாறி உள்ளது என்றால் பிழையில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் குறிப்பாக இதனை பயன்படுத்தி தகவல் தேடல்,கட்டுரை,எழுதுதல் நிரலாக்கு உதவி, கோட்பாடுகளின் விளக்கம், மொழிபெயர்ப்பு,தேர்வு தயாரிப்பு,வினாக்களுக்கு விடைகளை பெற்றுக் கொள்ளுதல் என பன்முகத்திலான தேவைகளை பூர்த்தி செய்து கொள்கின்றனர். ChatGPT ஓர் சக்தி வாய்ந்த உதிரி கருவி ( Supportive tool) மட்டுமே. அது மாணவர்களின் அறிவு பயணத்திற்கு துணை தரும் ஓர் சிந்தனை உடனான கருவியாக இருக்கும் அதே வேளை எதிர்மறையான பக்கங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

ChatGPT உதிர் கருவியின் சாதக விடயங்களை உள்ளடக்கிய பக்கங்களை புரட்டிப் பார்த்தோமானால் அதன் முக்கிய நன்மைகளாக பின்வரும் விடயங்கள் அமைகின்றன.

1. அறிவு பெற விரைவான வழி மற்றும் நேர வழிகாட்டி

* மாணவர்கள் நேரம் குறைவாக இருக்கும்போது ஒரு தலைப்பினையோ அல்லது ஒரு கட்டுரையோ சுருக்கமாக புரிந்து கொள்ள வேண்டுமானால் ChatGPT ஒரு விரைவான எளிதான வழியை தரும். இதன் மூலம் மாணவர்கள் ஒரு விடயத்தை எளிமையாக புரிந்து கொள்ளவும், நேரத்தை மீதப்படுத்தவும் ஏதுவாக அமையும் இது ஒரு சாதாரண சம்பவம் அல்ல ஒரு புதிய கல்வி யுத்தியின் அறிகுறி

உதாரணமாக “Theory of multiple intelligences”-5 வரிகளில்.

2. எழுத்துத் திறனுக்கு ஆதரவு.

* மொழிப் பிழைகள், வாக்கிய அமைப்புகள், நடைமுறை எழுத்துமுறைகள் போன்றன ChatGPT மூலம் மாற்றி சிறப்பிக்க முடிகிறது. குறிப்பாக ஆங்கிலத்தில் எழுத கடினப்படும் மாணவர்களுக்கு இது தன்னம்பிக்கையை அளிக்கின்றது.




3. ஆய்வுப் பணிகளுக்கான வழிகாட்டி.

* ChatGPT ஆனது கட்டுரை வடிவமைப்பில் தலைப்பு கூறுகள் அமைத்தல், உள்ளடக்கத்திற்கான முன்னோட்டங்களுக்கான விளக்கங்களை தருதல், Assignment செய்தல் போன்றவற்றிற்கு உதவுவதால் ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட ஆய்வு விடயம் பற்றி தெரியாமல் தடுமாறும் மாணவர்களுக்கான சிறப்பான வழிகாட்டியாக அமைகின்றது. இது பின்னாளில் மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கும் அடித்தளமாக அமைகிறது.

4. திறன் வளர்ச்சிக்கு உதவுதல்.

* நிரலாக்கம் (Programing), கணிதம்,தரவியல்,புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களுக்கும் உதவுதல். குறிப்பாக Code debugging விளக்கங்கள் அளிப்பதால் மாணவர்கள் அது சார் விடயங்களை இலகுவாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்கிறார்கள்.

5. குழப்பம் தெளிக்க ஒரு தோழன்.

* ஒரு சில மாணவர்கள் விரிவுரையாளர்களிடம் மீண்டும் மீண்டும் விளக்கம் கேட்க தயங்குவார்கள் அல்லது பயப்படுவார்கள் ஆனால் ChatGPT போன்ற ஒரு bot மாணவர்கள் பயமின்றி தயக்கம் இன்றி தேடல்களை மேற்கொள்வதற்கு உறுதுணையாக அமைகின்றது.

ChatGPT யானது ஒரு கருவி , அந்த கருவி தரும் விடயங்கள் அனைத்தும் ஒரு கருவி அமைப்பிலேயே இருக்கும் அதன் அமைப்பினை மனிதர்கள் எழுதுவது போல மாற்றி அமைத்தல், ஒரு விடயத்தை ஒரு பத்து வயது குழந்தைக்கு விளக்குவது போல மாற்றி அமைப்பதற்குமான வசதி, ஒரு பெரிய பந்தியை சிறிய சிறியதாக மாற்றி எளிமையாக தருவதற்கான வசதிகள் இருப்பதனால் மாணவர்கள் அதன் உதவியை மென்மேலும் நாடி நிற்கின்றனர்.

உதாரணமாக - human – கருதி அமைப்பில் இருக்கும் ஒரு கட்டுரையை மனிதர்களின் கட்டுரை போல மாற்றி அமைத்தல். ELI 10 விளக்கமாக இருக்கும் ஒரு விடயத்தை 10 வயது குழந்தைகளுக்கு விளங்கப்படுத்துவது போல மாற்றி அமைத்தல்.
LISTIFY அண்ணிய அமைப்பில் இருக்கும் விடயங்களை சிறிது சிறிதாக உடைத்து தருதல்.



மறுபக்கம்: தோழன் தவறான வழிகாட்டியாக மாறும் சந்தர்ப்பம்.

ChatGPT எழுதும் பதில் உங்களுடையதா? உங்கள் அறிவின் வெளிப்பாடா?

1. நேர்மையான கல்வி முறைக்கு சவால்.

இதன் மூலம் பெறப்படும் பதில்களை எதுவித மாற்றம் செய்யாமல் நேரடியாக பயன்படுத்துவது கல்விசார் நேர்மையை (Academic integrity ) பாதிக்கக் கூடியது இது ஒரு வகையில் Plagiarism ஆகலாம். இதன் மூலம் உண்மையான திறமைகள் கேள்விக்கு உட்படுத்தப்படும்.

2. சிந்தனைத் திறன் முடக்கப்படுதல்.

வளர்ச்சி என்பது ஒரு மனிதனின் உடல் மட்டுமல்ல சிந்தனையும் சேர்ந்து வளர வேண்டும் அப்பொழுதுதான் அவன் ஒரு முழுமையான மனிதன் ஆகிறான் ஆனால் தற்போது மாணவர்கள் ஒரு விடயம் தொடர்பாக சிந்திப்பதில் முழுவதுமாக AI யினை நம்புவதால் ஒருவரின் ஆழ்ந்த அறிவு மனப்பான்மையை தளர்த்தும். தன்மையானது அவரின் அறிகை ரீதியான பிரச்சனைக்கு ஏதுவாக அமையும்.

உதாரணமாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் Assignment முழுவதுமாக ChatGPT மூலமே செய்தல் அத்துடன் நின்று விடாமல் மாணவர்கள் Reference $l ChatGPT இடம் இருந்து தான் பெற்றுக்கொள்ளல்.

3. தன்னம்பிக்கை குறைதல்.

எல்லாவற்றிற்கும் AI உதவியை பெறுபவர்கள் தம் சிந்தனையை சந்தேகிக்க வாய்ப்புண்டு “ChatGPT இன்றி நான் இல்லை” என்ற உணர்வு அவர்களிடம் ஆழமாக பதிவதனால் தங்களிடம் முழுமையான திறமை இருப்பினும் அதனை பயன்படுத்த தயங்குகிறார்கள்.

4. மனித உறவுகளுக்கான இடையூறு ஏற்படுத்தல்.

ஆரம்ப காலங்களில் ஏதேனும் கட்டுரை எழுதுதல் அல்லது கதை எழுதுதல் அல்லது ஆய்வு விடயம் குறித்து மாணவர்கள் விரிவுரையாளர்களை நேரில் சென்று தொடர்பினை ஏற்படுத்தி




அவர்களின் அறிவு அது சார்பு விடயங்களையும் பெற்றுக் கொள்வர். ஆனால் இப்போது ChatGPT என்றால் போதும் என்ற மனப்பாங்கு மனித உறவுகளை துண்டித்து விடுகிறது.

5. புத்தகங்களுக்கு மதிப்பற்ற தன்மை. தற்போதைய காலங்களில் தொழில்நுட்ப வளர்ச்சியால் புத்தகங்களின் மதிப்பு என்பது வீழ்ச்சி அடைந்து கொண்டே வருகின்றது அதிலும் குறிப்பாக மாணவர்கள் இந்த AI யை நம்புவதால்
நூலகங்களுக்கு சென்று புத்தகங்கள் வாசிக்கும் பழக்கங்களையும் முற்றுமுழுதாக கைவிட்டு விட்டனர்.

ChatGPT ஓர் மெய்நிகர் ஆசிரியராக இருக்கலாம் ஆனால் அது மனசாட்சியாக இருக்க இயலாது. இந்த AI முறையானது எமது கல்வி பயணத்தில் ஒரு வழித்துணையாக இருக்கலாம் ஆனால் அது எமக்கு பதிலாக கல்வி பயணத்தை முன்னெடுத்து செல்ல முடியாது. இன்றைய தொழில்நுட்ப உலகில் ChatGPT ஓர் புதிய நண்பன் என்றால் மாணவர்கள் அதன் மீது முழுமையான சார்பை வளர்த்து விடக் கூடாது அதை உணர்வும்,நெறிமுறையும் (Usage ethic ) கொண்டு அணுக வேண்டும்.

**சமநிலை திட்டம் – ChatGPT+ சிந்தனை = உண்மையான கல்வி**

ஒரு பல்கலைக்கழக மாணவியாக நான் உணர்வது ChatGPT பற்றி எமது வேலைகளை இலகுபடுத்துவதுடன் நாம் புதிய தகவல்களை பெற்றுக் கொள்வதற்கும் மற்றவர்களிடமிருந்து தனித்துவமான விடயங்களை வளர்த்துக் கொள்வதற்கும் உதவுவதுடன் அதனை நாம் பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒரு விடயம்.இருப்பினும் அதிலிருந்து பெறும் பதில்களை நாம் சரியாக விளங்கிக் கொண்டு எமது சொந்த வார்த்தையை பயன்படுத்தி எழுதுவதுடன் எமது சொந்த குரலையும் உருவாக்கினால் ஊாயவபீவு எமக்கு ஓர் சிறந்த நண்பனாகவும் ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் அமையும்.



# யுத்தங்களால் கிடைத்தது என்ன?

ஒரு அரசர் நிறைய நாடுகளை பிடித்தால் அவரை பேரரசர், சாம்ராட், சுல்தான் என்று அழைப்பது நாம் செய்த மிகப் பெரிய தவறு. தன்னுடைய சாம்ராஜ்யத்தை பெருக்கிக் கொள்ள மற்ற நாடுகளோடு சண்டை போட்டு அந்த நாடுகளை தன் கீழ் கொண்டு வருவது பாராட்டக்கூடிய செயல் அல்ல. மனித குலம் தனக்கு தானே அழித்துக் கொள்ள நடந்து வரும் கொடுமை.

எந்த யுத்தமும் மனிதாபிமானத்தோடு நடந்ததில்லை, நடப்பதில்லை. மனிதனுடைய உச்ச கட்ட கொடூரத்தை, கொலை வெறியை அங்கு பார்க்கலாம். எதற்காக? தன்னுடைய நாட்டை விரிவாக்கி ஆளுவதனால் மக்களுக்கு என்ன நன்மை? தன்னை சரித்திரம் மாவீரன் என்று அழைக்க அரசர்களுக்கு ஏற்பட்ட ஆசையும், யுத்த வெறியும் நாடு பிடிக்கும் கொடுமையாக இருக்கிறது. ஒவ்வொரு யுத்தத்திலும் தன்னுடைய வீரர்களை பலி கொடுத்து எதிரி நாட்டு வீரர்களையும் கொன்று பெறும் வெற்றியால் என்ன கிடைக்க போகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் சாவதைத் தவிர வேறென்ன? ஒரு அரசர் சிறிய நாட்டை ஆளுவதற்கும் பெரிய நாட்டை ஆளுவதற்கும் சரித்திரத்தில் என்ன மாற்றம் நடக்கப் போகிறது. நாடுகள் பிடிக்கப் பட்டு ஒன்றாக சேர்க்கப் பட்டு சில காலத்தில் துண்டு துண்டாக உடைந்து போன சரித்திரம் ஏராளம். இடையில் எத்தனை மரணம், எத்தனை அழிவு.

தம்மை காத்துக் கொள்ள ஒரு நாடு போரிடுவது வேறு, நாட்டை விரிவு படுத்த போரிடுவது வேறு. எதிரி நம்மை தாக்க



வரும் போது நம்மை காப்பாற்றிக் கொள்ள போரிட்டுதான் ஆக வேண்டும். திறமையான படை அமைப்பும், நல்ல போர் திறமையும், ஆயுத பலமும் ஒரு நாட்டுக்கு நிச்சயம் தேவை. தம்மை காத்துக் கொள்ளவே தவிர மற்ற நாடுகளை பிடிக்க அல்ல.

தன்னுடைய சாம்ராஜ்ஜியத்தை பெரிதாக்க நடத்தப் படும் போர்களை எந்த வகையில் நியாயப் படுத்த முடியும்?. ஒரு அரசனுடைய சிறப்பு தன்னுடைய ஆட்சி காலத்தில் நல்ல ஆட்சி கொடுப்பதுதான். நாடு எவ்வளவு பெரியது என்பது அல்ல. சிறு சிறு நாடுகளாக இருந்தால் என்ன தவறு?. மக்கள் நன்றாக வாழ வேண்டுமே தவிர எத்தனை போர்கள், எவ்வளவு அழிவு, எல்லை எவ்வளவு பெரியதானது என்று பார்க்கும் கொடுமையை பெருமையாக பல யுகங்களாக செய்து வருகிறோம்.

அலக்ஸாண்டர் தி க்ரேட் (Alexander the great), சரித்திரத்தில் தோல்வியே பார்க்காத மாபெரும் வீரனாக, யுத்த மேதையாக இன்று வரை போற்றப் படுகிறார். அவர் ஒரு மாவீரர் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால் நாணயத்தின் மறுபக்கத்தை பார்க்கும் போது அவருடைய 10 வருட போரினால் அழிந்தவர்கள் ஏராளம் ஏராளம். நாசமான நகரங்கள் ஏராளம். மாசிடோனியா முதல் வட இந்தியா வரை தன் ஆட்சிக்குள் கொண்டு வந்தார்.

போரின் போது அலக்ஸாண்டர் தீப்ஸ் (Thebes) நகரை தரை மட்டமாக்கினார். டைரே (Tyre) - வை வெற்றி கொண்டு அங்கு இருந்த போரிடக் கூடிய ஆண்கள் அனைவரும் படுகொலை செய்யப் பட்டனர். பெண்களும், சிறுவர்களும் அடிமைகளாக விற்கப் பட்டனர். பெர்சிபொலிஸ் நுழைந்ததும் அவருடைய படை வீரர்களை சூறையாட அனுமதித்தார். இந்த சூறையாடல் நிறைய நாட்களுக்கு நடந்தது.



அலக்ஸாண்டர் தன்னுடைய 20 வயது முதல் 32 வயது வரை போரிட்டுக் கொண்டே இருந்தார். 32 வயதில் திடீரென்று அலக்ஸாண்டர் இறந்ததால் அவருடைய சாம்ராஜ்ஜியம் உடைய ஆரம்பித்தது. வாரிசு சண்டையினால் சுமார் 40 வருடம் தொடர்ந்து யுத்தம் நடந்து கொண்டே இருந்தது. அதன் பின் 4 பெரிய பிரிவுகளாக உடைந்தது. அதற்கு அப்புறம் வேறு வேறு நாடுகளாக உருவாயின.

சரித்திரம் போற்றும் மற்றொரு மாவீரன் நெப்போலியன் போனபார்ட் (Napoleon Bonaparte). இவரின் தொடர் யுத்தங்களினால் கிட்டத்தட்ட எழுபது லட்சம் பேர் கொல்லப் பட்டனர்.

சிரியாவின் முக்கிய வியாபார இடமான ஜா.ஃ.பா (Jaffa)-வை நெப்போலியன் வெற்றி கொண்டபோது அவரின் கடும் கோபத்தினால் ஜா.ஃ.பாவில் உள்ள அனைவரும் கொடுமையாக கொல்லப் பட்டனர். அவருடைய அனுமதியின் பேரில் இரவு பகலாக கொலைகளும், பெண் கொடுமைகளும் நடத்தப்பட்டன.

ரஷ்யா உடன் போரோடினோ (Borodino) போரில் 44,000 ரஷ்யாவின் வீரர்களும் 35,000 ப்ரெஞ்சு வீரர்களும் பலமான காயங்கள் பட்டோ சிறை பிடிக்கப் பட்டோ மற்றும் கொல்லப் பட்டனர். அன்றைய சரித்திரத்தில் இந்த போர் ஒரு பெரிய ரத்த களமான போராக இருந்தது.

ப்ரெஞ்சு படையினர் 4 லட்சம் பேர் ரஷ்யாவின் உடன் போரில் இறங்கினர். ஆனால் யுத்தம் முடியும் தறுவாயில் 40,000 பேர் மட்டுமே உயிரோடு பெரிசினா ஆற்றை (Berezina River) கடந்தனர். ரஷ்யர்களின் தரப்பில் 1,50,000 வீரர்களும், பல்லாயிரக் கணக்கான பொது மக்களும் இறந்தனர். கிட்டத்தட்ட 12 வருடங்கள் யுத்தங்களில் வெற்றியை பெற்ற நெப்போலியன் ரஷ்ய யுத்தத்தில் தோற்று கைது செய்யப்பட்டார். செங்கிஸ்கான் () ஒரு மாபெரும் தலைவராக, வீரராக சொல்லப் படுகிறார். அவருடைய தொடர் யுத்தத்தால் சுமார் 4 கோடி மக்கள் கொல்லப் பட்டனர். உலக மக்கள் தொகையில் சுமார் 11% அழிக்கப் பட்டனர்.

மங்கோலியர்கள் சாமர்கண்ட் (Samarkand)- ஐ வெற்றி கொண்டதும் செங்கிஸ்கானை எதிர்த்து போரிட்ட அனைத்து போர் வீரர்களும் கொல்லப்பட்டனர். அங்கிருந்த மக்களை ஊருக்கு வெளியே ஒன்றாக வரவழைத்து அனைவரும் கொல்லப் பட்டனர். வெட்டப் பட்ட தலைகள் மலை போல் குவிந்து செங்கிஸ்கானின் வெற்றியை பறை சாற்றியது. அவர் வெற்றி கொண்ட நிறைய நாடுகளில் மக்கள் கூண்டோடு அழிக்கப் பட்டன. நகரங்கள் அடியோடு அழிக்கப் பட்டன.

தைமுர் (Timur) ஆட்சி காலத்தில் ஆசியா, ஆப்ரிக்கா, ஐரோப்பா ஆகிய அனைத்தும் அவரைக் கண்டு மிகவும் அஞ்சின. அவருடைய படை சென்ற இடங்கள் அழிவு கண்டது. 170 லட்சம் மக்கள் கொல்லப் பட்டனர். இது அன்றைய மக்கள் தொகையில் 5% ஆகும். தைமுர் ராணுவ மேதை என்றும் போர் திட்டங்களை தீட்டுவதில் வல்லவர் என்று சரித்திரம் சொல்கிறது. தைமூரின் ஆதரவு பெற்ற டோக்டமி மாஸ்கோ முழுவதும் எரித்தார்.




தைமுர் ஹீரட் நகரை வென்று அதை தரை மட்டமாக்கி, அங்குள்ள பெரும்பாலான மக்களை படுகொலை செய்தார். இந்திய மற்றும் பாக்கிஸ்தான் மீது படை எடுத்து பலரை படுகொலை செய்தார். தனது போர் தந்திரங்களினால் டில்லி சுல்தானை வென்று டெல்லியில் இருந்த மக்கள் அனைவரையும் கொன்றார்.

இரு நூற்றைம்பது வருட மங்கோல் யுத்தங்களினால் கொல்லப்பட்ட மக்கள் தொகை கிட்டத்தட்ட மூன்றில் இருந்து ஆறு கோடி. மஞ்சூரியன் பேரரசின் விரிவாக்கத்தால் கொல்லப்பட்ட மக்கள் தொகை கிட்டத்தட்ட இரண்டில் இருந்து மூன்று கோடி.

இது சரித்திரத்தில் இடம் பெற்ற ஒரு சில உதாரணங்கள். இதை விட பெருவாரியான கொலை, பேரழிவு, கொடுமையான போர்கள் எத்தனை, எத்தனை?. எரிக்கப் பட்ட நகரங்கள் எத்தனை?. தரைமட்டமாக்கப்பட்ட ஊர்கள் எத்தனை?.


சுமார் 5,000 வருடங்கள் சரித்திரத்தை திரும்பி பார்க்கையில் எந்த தேசத்தின் எல்லை இது வரை மாறாமல் இருந்திருக்கிறது? எத்தனை அரச வம்சங்கள் அழிந்து போயின? எத்தனை அரசுகள் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கின்றன. ஒரே குடையின் கீழ் அனைத்து நாடுகளையும் கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன?

நாடுகள் பிரிய பிரிய சேர்க்கப் படுகிறது. சேர்க்க சேர்க்க பிரிக்கப் படுகிறது. சரித்திரம் முழுக்க இதுதானே காணப்படுகிறது.




அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு

# 43 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடைபெறும் IESL இன் புத்தாக்க போட்டிகள்




IESL (The institution of Engineers> SriLanka) வருடந்தோறும் தேசிய மட்டத்தில் நடத்துகின்ற இளைஞர்களுக்கான மாபெரும் புத்தாக்க போட்டி - 2025 தொடர்ச்சியாக 43 ஆவது ஆண்டாக இந்த ஆண்டு நடைபெறுகிறது. அதன் முதற்கட்டமாக வட பிராந்திய மட்ட போட்டிகள் கடந்த சனிக்கிழமை 20.09.2025 அன்று காலை 9.00 மணிமுதல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள பொறியியல் பீடத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.


யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பெருமளவு மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் புத்தாக்க கண்டுபிடிப்புக்களை காட்சிப்படுத்தினார்கள்.










பொறியியலாளர்களையும், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களையும் உள்ளடக்கிய நடுவர் குழுவினரால் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் துல்லியமாக ஆராயப்பட்டு மதிப்பெண்கள் இடப்பட்டன. வெற்றியாளர்கள் அடுத்த நிலைக்கு தெரிவு செய்யப்படுவதுடன், பங்குபற்றிய யாவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, பிரயாணச் செலவும் கையளிக்கப்பட்டது.

மாணவர்களின் புத்தாக்க சிந்தனைகளை சமுகத்திற்கு பயன்தரும் வகையில் பயன்படுத்திக் கொள்கின்ற இது போன்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக அதிகமாக நடைபெற வேண்டுமென்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.











# மலையக பெண்களின்சமூக இடைவெளியிருந்து முன்னோக்கிய பாதை ஓர் விமர்சன கண்ணோட்டம்

சரவணன் லக்ஷ்ஹரன்,
மூன்றாம் வருட
உளவியல் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

மலையகப் பெண்கள் இலங்கையின் சிறுபான்மை சமூகங்களில் ஓர் குறிப்பிடத்தக்க சமூகக் குழுவாக இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், மத நம்பிக்கைகள், கலாச்சார மரபுகள் மற்றும் சமூக அமைப்புகள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த ஆய்வில், மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக இடைவெளி, மத சார்ந்த சடங்குகள், பண்பாட்டு விழாக்கள், நடைமுறைச் சவால்கள் மற்றும் தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பலதரப்பட்ட பார்வையில் ஆராயப்படுகிறது. இவ்வாய்வு மலையகத் தமிழ்ப் பெண்களின் சமூக இடைவெளி, மத கலாசாரப் பங்கு மற்றும் சமூக அசைவுகள் (social interaction) பற்றிய விவரங்களை ஆராய்கிறது. இலங்கையின் பிற தமிழ் சமூகங்களை ஒப்பிடுகையில், மலையகப் பெண்கள் சமூகத்தில் பங்கேற்பது, வெளிப்புற உறவுகளை உருவாக்குவது, மற்றும் கல்வி சுகாதார துறைகளில் தங்கள் பங்கினை விருத்தி செய்வது ஆகியவற்றில் கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

இலங்கையில் மலையக மக்களின் சமூகநிலை குறித்த வரலாற்று, அரசியல் கவனங்கள் அதிகம் பெற்றிருந்தாலும், பெண்கள்

மற்றும் அவர்களது மத கலாச்சார இடமாற்றங்கள் குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாக உள்ளன. இங்கு சமூக இடைவெளி என்பது வறுமை, கல்வி, சுகாதாரம், தீர்மான சக்தி, மற்றும் தொழில்நுட்பமயமாக்கம் போன்ற அம்சங்களில் பிரதிபலிக்கின்றது. இதற்கு முக்கியக் காரணமாக மதப் பழக்கவழக்கங்கள், குடும்ப கட்டுப்பாடு, பொருளாதார வரம்புகள், மற்றும் ஆணாதிக்க அமைப்பு விளங்குகின்றன. பூப்புனித நீராட்டு விழா, திருமண முறைகள், தொழிலாளி வாழ்க்கை, சமூக புறக்கணிப்பு போன்றவைகள் மூலம் மத கலாச்சாரமும், சமூக மாற்றங்களும் சந்திக்கின்றன. மலையக சமூக இடைவெளி விளக்கம் (Social Stratification) கல்வி மற்றும் பொருளாதார நிலைபாடு , மரபணுக்காக விதிக்கப்பட்ட ஜாதி அடிப்படையிலான புறக்கணிப்பு , குடும்பத் தலைவர் அமைப்பில் பெண்களின் பங்கு , சமூக தீர்மானங்களில் பங்கெடுத்தல் என அமைந்துள்ளது. மாறாக கணவனை இழந்த குடும்பங்களில் குடும்பதலைவியாக பெண்களின் நிலை, நடைமுறை பிரச்சினைகள், வேலைக்கு செல்லும் இடங்களில் பாதுகாப்பின்மை, அரசாங்க நலத்திட்டங்களில் பங்கு குறைபாடு, கல்வி மற்றும் சுகாதார வசதிகள் பற்றாக்குறை, பாலின வேறுபாடுகள் காரணமாக உருவாகும் ஒடுக்குமுறைகள் என்பனவற்றால் மலையகப் பெண்களின் சமூக இடைவெளியில், அவர்களின் கல்விசார் முன்னேற்றத்திலும் சுகாதார விழிப்புணர்விலும் நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. கல்வி வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், பல பெண்கள் ஆரம்ப நிலை கல்வியில் நிறுத்திக் கொள்கின்றனர்.

இதன் விளைவாக வேலைவாய்ப்பு குறைபாடு, பொருளாதார சார்பு, மற்றும் சமூக முடிவெடுப்புகளில் பங்கேற்பு இல்லாமை போன்ற பிரச்சினைகள் தொடர்ச்சியாக உருவாகின்றன. அதேபோன்று, சுகாதார நலனுக்கான விழிப்புணர்வு குறைவால், ஊட்டச்சத்து குறைபாடு, தாய்மை மற்றும் குழந்தைகள் நல குறைபாடு, மனநலம் சார்ந்த பிரச்சினைகள் ஆகியவை பரவலாகக் காணப்படுகின்றன. ,வ்வாய்வின் முக்கியக் கண்டுபிடிப்பு என்னவெனில், மலையகப் பெண்களின் சமூக முன்னேற்றத்தை விருத்தி செய்ய கல்வி மற்றும் சுகாதார துறைகளில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவைப்படுகிறது.

கல்வி துறையில் Scholarship> ICT அடிப்படையிலான திறன் பயிற்சி, மற்றும் சமூகக் கற்றல் மையங்கள் (Community learning hubs) நிறுவப்பட வேண்டும். சுகாதார துறையில் Reproductive health clinics, Mobile health camps, மற்றும் மனநல

ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். மேலும், பெண்களின் மத கலாசார அடையாளத்தை மதிக்கும் வகையில் Community centers உருவாக்கப்பட்டால், அவர்கள் பாதுகாப்பான சூழலில் சமூக பங்கேற்பை அதிகரிக்கலாம். ஆய்வின் முடிவுகளை நடைமுறைச் சூழலோடு பொருத்தி மாற்றும்போது, தோட்டப் பகுதிகளில் “பெண்கள் கல்வி மற்றும் சுகாதார மையங்கள்” நிறுவப்படுவது முக்கியமான படியாகும். இம்மையங்கள் மூலமாக பெண்களுக்கு அடிப்படை கல்வியறிவு, ஆரோக்கிய பரிசோதனைகள், தொழில் முனைவுத் திறன் பயிற்சிகள் வழங்கப்படலாம். இதன் மூலம் சமூக இடைவெளி குறையும், பெண்கள் சமூக முன்னேற்றத்தில் பங்காற்றும் வாய்ப்பும் அதிகரிக்கும்.மலையகப் பெண்களின் சமூக இடைவெளி மற்றும் மத கலாசார இருப்பு, அவர்களின் கல்வி மற்றும் சுகாதார முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. ஆனால், சமூக கலாசாரச் சூழலை மதித்து, கல்வி மற்றும் சுகாதார துறைகளில் நடைமுறைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால், அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். இது மட்டுமின்றி, சமூக அசைவு அதிகரித்து, மலையகப் பெண்கள் நாட்டின் கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியில் பங்கு பெறும் நிலை உருவாகும்

மலையகத் தமிழ்ச் சமூகமானது இலங்கையில் சுமார் 10 லட்சம் மக்கள் கொண்டுள்ளது (Department of Census & Statistics> 2021). இவ்வசதிகளில் பெரும்பாலோர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். 65% பெண்கள் தொழிலாளர் நிலைமையில் உள்ளனர் (ILO Report> 2018). மலையகக் கிராமங்களில் குடிநீர், சாலை, மின் விநியோகம், மற்றும் வீட்டு வசதி போன்று அடிப்படை வளங்கள் இன்னும் போதிய முறையில் கிடைக்கவில்லை. இந்நிலை பெண்களின் அன்றாட வாழ்க்கையை சிரமப்படுத்துகிறது. குடிநீருக்காக நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டியிருப்பது, அவர்களின் கல்வி மற்றும் சமூகச் செயல்பாடுகளில் பங்கேற்பதற்கான நேரத்தை குறைக்கிறது. போக்குவரத்து வசதி இல்லாமையால், பெண்கள் மற்றும் சிறுமிகள் மேலதிகக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளைப் பெற முடியாமல் உள்ளனர்.

கல்வி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் குறைபாடு, மற்றும் குடும்பத்தில் மதுபோதையால் ஏற்படும் வன்முறை போன்றவை பெண்கள் மற்றும் சிறுமிகளின் வாழ்க்கையை ஆழமாகப் பாதிக்கின்றன.UNDP 2020 அறிக்கையின்படி, மலையகக்

கிராமங்களில் 42% குடும்பங்கள் மட்டுமே நிலையான குடிநீர் வசதி பெற்றுள்ளனர்.மின் விநியோகம் சுமார் 67% வீடுகளுக்கு சென்றடைகிறது. ஆனால் அடிக்கடி மின் துண்டிப்பு காரணமாக மாணவர்கள் இரவு நேரக் கல்வியில் சிரமம் அனுபவிக்கின்றனர். நுவரெலியா மாவட்டத்தில் பெண்கள் தினசரி 1–2 கி.மீ தூ ரம் நடந்து குடிநீர் எடுக்கின்றனர். இதனால் கல்வி, வேலை, குழந்தை பராமரிப்பு போன்ற செயல்களில் நேரம் குறைகிறது. மலையகப் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள், ஊட்டச்சத்து குறைபாடு, மாதவிடாய் சுகாதாரம் பற்றிய அறிவின்மை, தாய்மை மற்றும் குழந்தைகள் நலம் சார்ந்த சிக்கல்கள் போன்றவையாகும். கிராம மட்டத்தில் மருத்துவ முகாம்கள், சுகாதார ஆலோசனை சேவைகள், மற்றும் பெண்களுக்கு சிறப்பாக உளநலம் தொடர்பான சேவைகள் கிடைப்பது மிக அவசியம். மனநலம் சார்ந்த பிரச்சினைகள் குறிப்பாகப் பரவலாக இருந்தாலும், அதற்கான விழிப்புணர்வு மிகக் குறைவாக உள்ளது. தோட்டப் பெண்கள் தினசரி சராசரியாக 8–10 மணி நேரம் பணி செய்கின்றனர்.

Save the Children (2019) அறிக்கையின்படி, மலையகக் குழந்தைகளில் 28% பள்ளிக்கு சீரான முறையில் செல்லவில்லை. எடுத்துக்காட்டாக கந்தப்பொளையக் கிராமத்தில் குழந்தைகள் பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும் நேரத்தில் தாத்தா/பாட்டி பராமரிப்பில் வைக்கப்படுகின்றனர் ஆனால் கல்விசார் ஆதரவு மிகக் குறைவு. Day-care centers இல்லாமையால், 0–5 வயது குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடால் பாதிக்கப்படுகின்றனர் (WHO Nutrition Survey, 2022 – மலையகத்தில் குழந்தைகளில் 33% stunting).

பெண் பிள்ளைகள் கல்விச் சூழலில் பங்கெடுத்தாலும், கிராமிய மட்டத்தில் நடைபெறும் வேலைத்திட்டங்களில் அவர்களின் பங்களிப்பு மிகக் குறைவு. சமூகக் கட்டுப்பாடுகள், பாலின அசமத்துவம், மற்றும் குடும்பச் சுமைகள் காரணமாக, அவர்கள் சமூக முன்னேற்றத் திட்டங்களில் பங்காற்றும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. எனினும், மாணவச் சங்கங்கள், விளையாட்டு குழுக்கள், மற்றும் சமூக சேவைத் திட்டங்கள் மூலமாக பெண்கள் பங்கேற்பை ஊக்குவித்தால், அவர்களின் சமூக அசைவு அதிகரித்து, எதிர்கால தலைமைத்துவத்திற்கான திறன்கள் வளர வாய்ப்புண்டு.

குடும்ப சூழல் - மது மற்றும் போதைப்பொருள் பாதிப்புமலையகக் குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் மதுபோதையில் ஈடுபடுவது, குடும்பத்தின் பொருளாதார நிலையை மட்டுமல்லாமல், பிள்ளைகளின் கல்வி மற்றும் பாதுகாப்பையும் நேரடியாக பாதிக்கிறது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல், வீட்டு வன்முறை, பாதுகாப்பின்மை, மற்றும் மனஅழுத்தம் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். குறிப்பாக பெண் பிள்ளைகள் குடும்பத்தினரால் திணிக்கப்படும் பாதுகாப்பின்மையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாமல் போகிறது.ADIC Sri Lanka (2023) ஆய்வின்படி, மலையகத் தொழிலாளர்களில் 45% ஆண்கள் அடிக்கடி மது அருந்துவதாகக் கூறியுள்ளனர். 30% குடும்பங்கள் குடும்பச் சண்டைகள் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறைக்கு “மதுபோதை”யை காரணமாகக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக நுவரெலியாவின் சில பாடசாலைகளில், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி குறைபாட்டிற்கு “குடும்ப வன்முறை மற்றும் மதுபோதை” பிரதான காரணம் என சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் பெண் பிள்ளைகள் கல்வியில் பின்தங்குவது மட்டுமல்ல, school dropout விகிதம் 12–15% வரை அதிகரிக்கிறது. பாடசாலை மட்ட தீர்வுகள் கல்வி வாய்ப்புகளை மேம்படுத்துதல் மூலம் மாணவிகளுக்கான சிறப்பு scholarship திட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். பள்ளி விட்டு விலகும் மாணவிகளுக்கான second-chance education programs (இரவு வகுப்புகள், சமூகக் கற்றல் மையங்கள்) அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இந்தியாவின் National Literacy Mission போல, மலையகத்தில் “மாணவிகள் எழுச்சி திட்டம்” (Girls Uplift Program) தொடங்கலாம். பாலின சமத்துவக் கல்வியை அறிமுகப்படுத்தி பாடசாலைகளில் Gender Equality Clubs உருவாக்கி, மாணவர்களின் தலைமைத் திறன்களைப் பெற ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களுக்கு gender-sensitive training வழங்கப்பட வேண்டும்.சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து நடைமுறைகள் பள்ளி அடிப்படையில் mid-day meal program அமல்படுத்தப்பட வேண்டும். UNICEF 2021 ஆய்வின்படி, பள்ளியில் உணவு வழங்கப்பட்ட மாணவிகள், வகுப்பு பங்கேற்பில் 20% அதிகமாக ஈடுபட்டனர். மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.பாதுகாப்பு சார்ந்து பள்ளிகளில் child protection committees அமைத்து, மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். பாலியல் தொந்தரவு குறித்த புகார் பெட்டிகள்



மற்றும் இரகசிய ஆலோசனை மையங்கள் இருக்க வேண்டும். குடும்ப மட்ட தீர்வுகள் குடும்ப விழிப்புணர்வுக்கு பெற்றோர்கள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள parental awareness workshops நடத்தப்பட வேண்டும். ஹட்டன் பகுதியில் Save the Children நடத்திய “ Parent–Teacher Interaction Program” மூலம், 70% பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மேல்நிலைக் கல்விக்குச் செலுத்தத் தயாரானார்கள். பெற்றோர்கள்–ஆசிரியர்கள் இணைந்து Child Progress Monitoring System உருவாக்க வேண்டும். மாதாந்த பெற்றோர் கூட்டங்களில் மாணவிகளின் முன்னேற்றம், சவால்கள் விவாதிக்கப்பட வேண்டும். ஒருங்கிணைந்த அணுகுமுறையாக பாடசாலையும் குடும்பமும் இணைந்து பங்காற்ற வேண்டும். குழந்தைப் பராமரிப்பு வசதிகள் மற்றும் குடும்ப விழிப்புணர்வுகள் பெண்களுக்கு வேலைக்குச் செல்லும் நேரத்தில் day-care centers அமைக்கப்பட வேண்டும். தாய்மார்களுக்கு nutrition and child care training வழங்கப்பட வேண்டும்.

குடும்ப ஆலோசனை மையங்கள் மூலம் குடும்பத்தில் ஏற்படும் வன்முறை மற்றும் சண்டைகளுக்கு family counselling units அமைக்கப்பட வேண்டும்.எடுத்துக்காட்டாக இந்தியாவின் Self Employed Women’s Association (SEWA) போல, மலையகப் பெண்களுக்கு குடும்பச் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படலாம். குடும்பம் சார் சமூக அமைப்புகள் குடும்பங்கள் மற்றும் NGO-க்கள் இணைந்து Nutrition Gardens அமைத்து, ஊட்டச்சத்து குறைபாட்டை குறைக்கலாம். குடும்ப ஆலோசனை மையங்களை சமூக அமைப்புகள் நிர்வகிக்கலாம். மது மற்றும் போதைப்பொருள் எதிர்ப்புக்களை குடும்பத்தினுள் குடும்பத் தலைவர்களை குறிவைத்து de-addiction programs நடத்தப்பட வேண்டும். Community Alcohol-Free Campaigns மூலம் குடும்ப வன்முறையை குறைக்க முடியும்.

சமூக அமைப்புகளின் பங்களிப்பு அடிப்படை வசதிகளை உள்ளூர் சமூக அமைப்புகள் (NGO/Youth Clubs) இணைந்து குடிநீர், மின், சாலை வசதிகளை மேம்படுத்த அரசுடன் இணைந்து

செயல்பட வேண்டும். நுவரெலியாவில் Women Development Federation> 200 குடும்பங்களுக்கு மழைநீர் சேகரிப்பு திட்டம் அமைத்து குடிநீர் பிரச்சினையைத் தணித்துள்ளது. பெண்களின் சமூக அசைவுயை உறுதிப்படுத்த Women's Community Centers உருவாக்கி, பெண்கள் சமூகக் கலந்துரையாடலில் பங்கேற்க வாய்ப்பு பெற வேண்டும். தொழில் முனைவுத் திறன்களை வளர்க்க skills development workshops நடத்தப்பட வேண்டும். நலன் சார் சுகாதார சேவைகள் சமூக அமைப்புகளால் mobile health clinics நடாத்தி, மாதந்தோறும் சுகாதார பரிசோதனை வழங்க வேண்டும். மனநலம் தொடர்பான peer-support groups உருவாக்கப்பட வேண்டும். கல்வி மற்றும் சமூக பங்கேற்பு மாற்றத்தில் வழுச்சேர்க்கும்.அதன்படி NGO-fs; girls mentorship programs நடத்தி, மாணவிகளுக்கு உயர்கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டுதலை வழங்க வேண்டும்.

ADIC நடத்தும் Youth Ambassador Program போல, மலையகப் பகுதிகளில் "Girls Leadership Ambassadors" உருவாக்கலாம். மது மற்றும் போதை எதிர்ப்பு சமூக அமைப்புகள் Awareness street drama >Poster campaigns> Community talks போன்ற வழிகளில் மதுவிலக்கு விழிப்புணர்வை பரப்ப வேண்டும்.2023-இல் ஹபுத்தளை பகுதியில் நடந்த "Alcohol Free Village Campaign" மூலம், 15% ஆண்கள் மதுப் பழக்கத்தை நிறுத்தியதாக அறிக்கை கூறுகிறது. பாடசாலை சமூக அமைப்புகள் பள்ளி மாணவிகளுக்கான career guidance workshops சமூக அமைப்புகள் மூலம் நடத்தப்படலாம். School Community Partnership Programs மூலம் சிறுமிகள் சமூக சேவையில் பங்கேற்கலாம்.மலையகப் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல அடுக்குகளில் (multi-dimensional) உள்ளன. அடிப்படை வசதிகள் பற்றாக்குறை, குழந்தைப் பராமரிப்பு சிக்கல்கள், சுகாதார சேவை குறைபாடு, மற்றும் குடும்பத்தில் மது போதையால் உருவாகும் வன்முறை ஆகியவை அனைத்தும் இணைந்து அவர்களின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்தைத் தடுக்கின்றன.

சமூகம் வளம் பெற வீட்டிலிருந்து மாற்றம் தேவை.
விவேகானந்தர் கூறியது போல
"நீ திருந்து உலகு தானே திருத்தும்" . சுய அடையாளத்தை உணர்ந்து உண்மையுடன் மாற்றம் காண்போம்.



# கிழக்குலகின் அதிகார உதயம்

சௌந்தரராஜன் துர்ஷாயினி
மூன்றாம் வருடம்
ஊடகத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

வரலாற்றில் 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் மேற்குலக நாடுகள், குறிப்பாக பிரிட்டன், பிரான்ஸ்,ஸ்பானியா பின்னர் அமெரிக்கா ஆகியவை உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் முன்னணியில் இருந்தன. ஆனால் 21ஆம் நூற்றாண்டுக்குள் வந்தபோது, இந்த நிலைமையில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகின் அதிகாரச் சமநிலையானது படிப்படியாக மேற்குலகத்திலிருந்து கிழக்குலகத்திற்குச் செல்லும் நிலையை காணக்கூடியதாக உள்ளது.

இதில் சீனா முக்கிய இடத்தினை பெறுகின்றது. கிழக்குலகின் அதிகாரத்தின் மையமாக இது திகழ்கிறது. சீனா உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாக மட்டும் அல்லாமல், உலகளாவிய வர்த்தக மற்றும் முதலீட்டுத் தளமாகவும் உருவெடுத்துள்ளது. Belt and Road Initiative (BRI)மூலம் ஆசியா,ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றை இணைக்கும் வணிகச் சாலையை உருவாக்கி வருகிறது. தொழில்நுட்ப துறையில் செயற்கை நுண்ணறிவு, 5G மின்சார வாகன உற்பத்தி போன்ற துறைகளில் சீனா மேற்குலகத்துடன் போட்டியிடுகிறது. மேலும், தென்கிழக்காசியாவில் அதன் இராணுவப் பங்களிப்பும் உலக அதிகார சமநிலையை மாற்றுகின்றது.

சீனாவை பின்பற்றி இந்தியாவும் கிழக்குலகின் அதிகார பலத்தை தன் கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இதன்படி ,இந்தியா, சீனா எதிரி நாடுகளாக இருந்தாலும் வர்த்தக ரீதியாக ராஜதந்திர ரீதியாகவும் ரகசிய நண்பர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக மட்டுமின்றி, அதிவேகமாக வளர்ந்து வரும் பொருளாதார மையமாகவும் திகழ்கிறது. தகவல் தொழில்நுட்ப சேவைகள், மருந்து உற்பத்தி, விண்வெளி ஆய்வு அதாவது சந்திரயான், ஆதித்ய-எல்1 திட்டம் போன்ற துறைகளில் இந்தியா உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும், இந்தியாவின் இளம் தொழிலாளர் வலிமை, வர்த்தக சந்தை, மற்றும் சர்வதேச கூட்டாண்மைகள் (அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆபிரிக்கா) ஆகியவை அதனை உலக அரசியலில் முக்கிய அங்கமாக்குகின்றன.

இந்த இரு நாடுகளையும் இணைக்கும் பாலமாக திகழ்வது ரஷ்யா எனும் முந்தைய வல்லரசாகும். 1991 ஆம் ஆண்டு ரஷ்யா சோவியத் ஒன்றியத்திலிருந்து வெளியேறி தனது பலத்தை குறைத்துக் கொண்டாலும் இன்றும் துடிப்புடன் செயற்பட்டு வரும் ஒரு நாடாகவே இருக்கின்றது. அதன் ஒரே குறிக்கோள் மேற்குலகின் அதிகாரச் சமநிலையை உடைப்பதே ஆகும்.

ரஷ்யா உலகின் முக்கிய எரிசக்தி உற்பத்தியாளர் நாடாகும். இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் மூலமாக ஐரோப்பிய நாடுகளின் மீது மிகுந்த தாக்கத்தை செலுத்துகிறது. இராணுவ வலிமை, அணு ஆயுதங்கள், மற்றும் உக்ரைன் போர் போன்ற அரசியல் நடவடிக்கைகள் மூலம் ரஷ்யா உலக சமநிலையில் தனித்துவமான இடத்தை பிடித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நாடுகளை தவிர பல நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பாகவும் செயல்படுகின்றது. இதன் மூலம் மேற்குலகின் அதிகாரச் சமநிலையை பெற்று அது கிழக்குலகின் பக்கம் ஈர்க்கப்பட்டு வருவதனை காண முடியும். அத்தகைய கூட்டமைப்புகளாக பிரிக்ஸ் மற்றும் ஆசியான் போற்ற கூட்டமைப்புகளை குறிப்பிடலாம்.



BRICS (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா) உலகின் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை பிரதிபலிக்கும் அமைப்பாக உள்ளது. இவர்கள் மேற்குலக ஆதிக்கத்திற்கு மாற்றாக ஒரு புதிய தளத்தை உருவாக்குகின்றனர். ASEAN தென்கிழக்காசியாவின் பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளை ஒருங்கிணைத்து, சீனா மற்றும் இந்தியாவுடன் வலுவான உறவை வளர்க்கிறது. Shanghai Cooperation Organisation (SCO) பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான கிழக்கு நாடுகளின் வலிமையை வெளிப்படுத்துகிறது.

இந்த மாற்றங்களின் விளைவாக, உலகம் இனி ஒருதுருவ அமைப்பில் இல்லாமல், பல்துருவ அமைப்பாக மாறியுள்ளது. மேற்குலக நாடுகளின் ஆதிக்கம் குறைந்து, கிழக்குலக நாடுகள் உலக வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் தீர்மானிக்கக்கூடிய பங்காற்றுகின்றன. இதன் மூலம் சர்வதேச அரசியலில் புதிய சமநிலை உருவாகிக் கொண்டு வருகின்றது.



# பேராசிரியராகியதோடு சாகித்திய விருதையும் பெற்றுக் கொண்டார் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா



கல்வித் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர், வானிலை முன்னறிவிப்பாளர், விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா அவர்கள் சமீபத்தில் பேராசிரியர் பதவிக்கு உயர்வு பெற்றுள்ளார். தனது உழைப்பும் தன்னலமற்ற சேவையும் கல்வித் துறையில் புதிய உயரங்களை எட்ட வைத்துள்ளன.

இந்த ஆண்டுக்கான கலாநிதி செஞ்சொற்செலவர் ஆறு திருமுருகன் பிறந்தநாள் அறநிதிச் சபையால் வழங்கப்படும் இளம் ஆற்றலாளர் விருதுவும் இவருக்கே வழங்கப்பட்டது. இவ்விருது அவரது திறமை, சேவை மற்றும் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாகும்.

மேலும், 2025 ஆம் ஆண்டிற்கான அரச இலக்கிய விழாவில், பேராசிரியர் கலாநிதி நா. பிரதீபராஜா அவர்களின் சுய புலமைத்துவ மற்றும் ஆய்வு சார்ந்த "பிராந்திய காலநிலையியல்" என்ற படைப்பு முதலாம் இடத்தை பெற்றுள்ளது. இலக்கியமும் அறிவியலும் ஒன்றிணையும் தனித்துவமான படைப்பாக இது மதிப்பிடப்பட்டது.

அரச இலக்கிய விழா ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்று, அதில் இவரது சாதனை அனைவரையும் பெருமைப்பட வைத்தது. கல்வி, ஆய்வு, இலக்கியம், சமூகப்பணி என பல துறைகளில் பங்காற்றும் இவரின் சாதனைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும், எமது மண்ணிற்கும் பெருமை சேர்த்துள்ளன.



பேராசிரியர் கலாநிதி நா. பிரதீபராஜா அவர்களுக்கு நாங்கள் அனைவரும் இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



# பள்ளி வயதில் வேலையா?

யோகராஜா பவ்யா
2ம் வருடம் உளவியல் துறை
யாழ்ப்பாணப்பல்கலைகழகம்.

பள்ளி வயது என்பது குழந்தைகள் வாழ்க்கையின் மிக முக்கியமான கட்டமாகும். இது அவர்களின் அறிவியல், சமூக, உடல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்கும் காலம். ஆனால் இன்று சில குழந்தைகள் பள்ளியில் கல்வி பயில வேண்டிய அந்த வயதில் வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர். இது நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய ஒரு சமூக சிக்கலாக உள்ளது.

ஏன் பள்ளி வயதில் வேலை செய்கிறார்கள்?
பல்வேறு காரணங்களால் பள்ளி மாணவர்கள் வேலை செய்யத் தொடங்குகிறார்கள்:

1. பொருளாதார வலிமையின்மை – குடும்பத்தின் வருமானம் குறைவாக இருந்தால், பெற்றோர் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பும் சூழ்நிலை ஏற்படுகிறது.

2. அறிவு இல்லாமை – கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு இல்லாத பெற்றோர் குழந்தைகளின் கல்வியைத்

தற்காலிக வசதிக்காக துறக்கின்றனர்.

3. ஊக்குவிக்கும் சூழல் – சில சமுதாயங்களில், குழந்தைகளை சிறு வேலைகளில் ஈடுபட வைப்பது சாதாரணமாக பார்க்கப்படுகிறது.
4. தனிப்பட்ட விருப்பம் – சில பள்ளி மாணவர்கள் சொந்த செலவுகளுக்காக (pocket money) வேலை செய்ய விரும்புகிறார்கள், குறிப்பாக part-time வேலைகள்.

பாதிப்புகள் என்ன?
பள்ளி வயதில் வேலை செய்வது குழந்தைகளின் பல துறைகளில் தீவிரமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது:

கல்வி பாதிப்பு: பள்ளிக்கு செல்லும் நேரம் குறைவாகி, மாணவர்கள் கல்வியில் பின்னடையக்கூடும்.

உடல் ஆரோக்கியம்: சிறுவயதில் வேலை செய்வதால் உடல் உழைப்பு அதிகரித்து, உடல் சோர்வாகும். பத்து மணி, பதினொரு மணி நேரம் வேலை செய்வது உடல் வளர்ச்சியைத் தடுக்கும்.

மனநிலை பாதிப்பு: வேலைச்சுமை, சிதைந்த வாழ்க்கை அனுபவம், உயர்ந்த எதிர்பார்ப்பு போன்றவை மன அழுத்தத்தைக் கொடுக்கக்கூடும்.

சமூக பின்விளைவுகள்: சிறு வயதிலேயே வேலை செய்யும் பிள்ளைகள், மற்ற குழந்தைகளோடு விளையாடும் நேரம் இழந்து தனிமையில் மாட்டிக்கொள்ளலாம்.

சட்டரீதியான நிலை

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் குழந்தைத் தொழிலாளர் தடுப்பு சட்டங்கள் (Child Labour Prohibition Acts) நிலவுகின்றன. இந்தியாவில் 14 வயதிற்கும் கீழ் உள்ள குழந்தைகளை எந்தவொரு ஆபத்தான தொழிலிலும் வேலை செய்ய விடக் கூடாது என்பது முக்கிய சட்டப்பிரமாணமாக இருக்கிறது.



ஆனாலும், இந்த சட்டங்கள் நடைமுறையில் பூரணமாக அமல்படுவது அரிதாகவே உள்ளது. பல இடங்களில் குழந்தைகள் தைக்கறிகள், ஹோட்டல்கள், டீ கடைகள், கட்டுமான வேலைகள் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள்.

பள்ளி மாணவர்களுக்கான பாதுகாப்பான வாய்ப்புகள் ஒருபக்கம், சிறு அளவிலான part-time வேலைகள் (போன்றது: tuition கற்பித்தல், online freelancing> content writing) சில மாணவர்களுக்கு அறிவும், அனுபவமும், பொறுப்பும் கற்றுத் தரும். ஆனால் இது கல்விக்கு பாதிப்பின்றி, கட்டுப்பாடுகளுடன் இருக்க வேண்டும்.

எந்த ஒரு வேலை செய்யும் முன்னும் மாணவ, மாணவிகள் “நான் என்ன கற்கிறேன்?”, “என் ஆரோக்கியம் பாதுகாப்பா?” என்பதைக் கேட்க வேண்டும்.

முடிவுரை



பள்ளி வயது என்பது வாழ்க்கையின் ஓர் முக்கிய காலம். அந்த பருவத்தில் கல்விக்கே முதன்மை கொடுக்கப்பட வேண்டும். வேலை செய்வது தவறல்ல, ஆனால் அது அந்த வயதுக்கு ஏற்றதல்ல. குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும், புத்தகங்களைப் படிக்க வேண்டும், விளையாட வேண்டும், கனவுகள் காண வேண்டும்.

அவர்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை நன்கு அடைய, நாம் அவர்களுக்கு கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு ஆகிய மூன்றையும் உறுதி செய்ய வேண்டும். சமூகமாக நாம் அவர்களை வேலைக்கு வைக்காமல், வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.



# துணிந்து நின்ற துனித் வெல்லாளகே

துனித் நெத்மிக்க வெல்லாளகே இலங்கையின் இளம் கிரிக்கெட் வீரர்களில் ஒருவராக பந்து வீச்சாளராகவே அதிகம் அறியப்பட்டாலும் துடுப்பாட்டத்திலும் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தியவர். 2003 ஜனவரி 9 ஆம் தேதி பிறந்த இவர் மொரட்டுவா ஸ்ட்.செபாஸ்டியன்ஸ் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு ஸ்ட்.ஜோசப் கல்லூரியிலும் கல்வி கற்றபோதே தனது திறமைகளை வெளிப்படுத்தினார்.



பள்ளி மட்டத்திலேயே பந்துவீச்சிலும் துடுப்பாட்டத்திலும் சிறந்து விளங்கியதால் இலங்கை 19 வயதிற்குட்பட்ட அணியில் இடம்பிடித்தார். 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத்தில் இலங்கை அணியின் கேப்டனாக செயல்பட்டு தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக 113 ரன்கள் குவித்து இலங்கை 19 வயதிற்குட்பட்ட அணியின் கேப்டனாக சதம் அடித்த முதல் வீரராக வரலாற்றில் இடம்பிடித்தார். அந்த தொடரில் அதிக விக்கெட்டுகளைப் பெற்றவர் என்ற பெருமையையும் பெற்றார்.

அவர் பந்து வீச்சாளராக அதிகம் கவனம் பெற்றது 2023 ஆசியக் கோப்பையில் நடந்தது. இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் அவர் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தியாவின் முக்கிய துடுப்பாட்ட வீரர்களை தடம் புரள வைத்தார். ரோஹித் ஷர்மா, சுப்மான் கில், கே.எல்.ராகுல், விராட் கோலி போன்ற முன்னணி வீரர்களை அவர் வீழ்த்தியதால் அந்த நாள் முழுவதும் அவரைப்பற்றியே பேசப்பட்டது. இலங்கை தோற்றிருந்தாலும் அந்த ஆட்டத்தில் அவருக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

ஒருநாள் மற்றும் தேர்வு அணிகளிலும் இடம்பிடித்து தொடர்ந்து விளையாடி வருவதோடு உள்ளூர் லீக்குகளிலும் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார். பந்துவீச்சில் மட்டுமல்லாமல் துடுப்பாட்டத்திலும் முக்கிய தருணங்களில் ரன்கள் குவித்து அணிக்கு துணை நிற்கும் திறமையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால் இவரின் வாழ்க்கையில் மிகக் கடினமான தருணம் 2025 ஆம் ஆண்டில் ஆசியக் கோப்பை தொடரின் போது ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டி முடிந்தபின் தான் தந்தை சுரங்க வெல்லாளகே மரண செய்தி இவருக்கு தெரிவிக்கப்பட்டது. குடும்ப துயரத்தில் சிக்கியிருந்தாலும் சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி போன்ற முன்னோடி வீரர்கள் போன்று தனிப்பட்ட வலியை மீறி மீண்டும் அணிக்கு திரும்பி விளையாடி தனது மனவலிமையை வெளிப்படுத்தினார். மிகக் குறுகிய காலத்தில் பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் சிறப்பாக செயல்பட்டதோடு குடும்ப சோகம் போன்ற தடைகளை கடந்து நிற்கும் உறுதியையும் காட்டியுள்ள துனித் வெல்லாளகே இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் என அனைவராலும் பாராட்டப்படுகிறார்.

